பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4 00

சுடர்: 6 பிரமோதூத ஆடி மாசி ீ 8 ௳ புதன்கிழமை (20-02-1991) UTHAYAN - A Lively Tamil National Daily கதிர் 85

# புலிகளுடன் பேச அரசு மீள முயற்சி!

## 'இந்து' நாளிதழ் தகவல்

புதுடில்லி, பெப். 20

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க ஸ்ரீலங்கா அரசு முயற்சிக்கிறது.

இது தொடர்பாக கடந்த மாத இறுதியில் இரண்டு மத்தியஸ்தர்கள் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் செய்தி ஒன்றை அனுப்பியது.

— இவ்வாறு சென்னையிலிருந்து வெளியாகும் "இந்து" நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அண்மையில் இந்த விடயம் குறித்து "இந்து" நாளிதழ் வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்கண்டிநேவிய நாடு ஒன்றின் கல்விமானும், அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பிரதிநிதியும் ஸ்ரீலங்கா அரசின் மத்தியஸ்தர்களாக – அர

[ ஆம் பக்கம் பார்க்க]

## உருத்திரபுரத்தில் நேற்றுங் குண்டு வீச்சு

கிளிநொச்சி, பெப். 20

உருத்திரபுரம் 10ஆம் வாய்க்கால் பிள்ளையார் கோவிலுக்கும் முருகன் கோவிலுக்கும் இடையிலுள்ள குடியிருப்புப் பகுதி மீது நேற்றுக் காலை 9-15 மணியளவில் பொம்மர் ஒன்று குண்டுகளை வீசித் தாக்கியது.

குண்டு வீச்சில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இரு வீடுகள் சேதமாகின.

படுகாயமடைந்த புஷ்பலீலா [வயது 40] என்ற பெண் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உருத்திரபுரம் பகுதியில் கடந்த 4ஆம் திகதி-சுதந்திர தினத்தன்று நடந்த குண்டு வீச்சில் 11 அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-76-15]

## நீர்வேலி, கரந்தனில்

நேற்று முற்பகல் 10.15 மணியளவில் வந்த இரண்டு பொம்மர்கள் நீர்வேலி வடக்கிலுள்ள கண்ணாடித் தொழிற்சாலைப் பகுதியிலும் கரந்தன் பகுதியிலும் குண்டுகளை வீசின.

மீண்டும் 11.15 மணியளவில் வந்த இரண்டு பொம்மர்கள் அதே பகுதிகளில் குண்டுகளை வீசின.

தொழிற்சாலை ஊழியர்கள் பாதுகாப்பான இடங்களை நாடியதனால் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. தொழிற்சாலை ஓரளவு சேதமானது.

கண்ணாடித்தொழிற்சாலை பகுதியில் ஏற்கனவே இரண்டு தடவைகள் குண்டு வீச்சுக்கள் இடம் பெற்றுள்ளன என்பதும் இதனால் தொழிற்சாலைக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்பதும் தெரிந்தவையே.

கரந்தன் பகுதியில் இரு தடவைகள் நடந்த குண்டு வீச்சில் இரு வீடுகள் சிறு சேதங்களுக்கு இலக்காகின. இப்பகுதியில் வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களும் நாசமாகின. [ஒ-154-72-15]

## ஐந்து மணி நேரம் தீவிரத் தாக்குதல்

பன்னாட்டுப் போர் விமானங்கள் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு முதல் 5 மணித்தியாலங்கள் வரை ஈராக் தலைநகர் பக்தாத் மீது தீவிரமான குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவின் சமரச யோசனைகளை எடுத்துக் கொண்டு ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸ் பக்தாத் திரும்பிக்கொண்டிருந்த சமயத்தில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 20 ஆயிரம் பேர் ஈராக்கில் பலி!

வளைகுடாப் போர் ஆரம்பித்த முதல் 26 நாட்களில் பன்னாட்டுப்போர் விமானங்களின் குண்டுவீச்சினால் ஈராக்கில் சுமார் 20 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்றும் 60 ஆயிரம் பேர் வரையில் காயமடைந்தனர் என்றும் ஈராக் தெரிவித்துள்ளது.

ஈராக்கு ஏற்பட்ட பொருட்சேதம் சுமார் 20 ஆயிரம் கோடி டொலர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## அம்பாறை படகு விபத்தில் மேஜர் காஸ்ட்ரோ மரணம்

யாழ்ப்பாணம், பெப். 20

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்பொறுப்பாளர் மேஜர் காஸ்ட்ரோவும் [மயில்வாகனம் பூபானந்தராசா— பொத்துவில்], ஜெனிஸ் [சீனித்தம்பி சுபேந்திரராசா— பொத்துவில்] என்ற மற்றொரு போராளியும் படகு விபத்து ஒன்றில் வீரமரணமடைந்தனர்.

கடந்த சனியன்று அம்பாறைப் பகுதியில் ஆறு ஒன்றில் சென்று கொண்டிருந்த போது படகு நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போராளிகள் இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். [உ]

## வவுனியாவுக்கு அம்புலன்ஸ்

வவுனியா, பெப். 20

வவுனியா ஆஸ்பத்திரிக்கு அவசர உதவியாக அம்புலன்ஸ் ஒன்றை பிரிட்டிஷ் தூதரகம் வழங்கியுள்ளது.

பிரிட்டிஷ் தூதுவர் கடந்த மாதம் வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்தார் என்பது தெரிந்ததே. [ஒ-3]

## முச்சந்தி முரளி



அன்னையரின்லர கண்ணீர் அரசின் ரை கண்ணிலை [illegible]

## உருக்கமாக நடந்த அன்னையர் மாநாடு

கொழும்பு, பெப். 20

தென்பகுதி அன்னையர் முன்னணியின் முதலாவது மாநாடு நேற்று நுகேகொடையில் நடைபெற்றது.

ஏராளமான பெண் பிரதிநிதிகளுடன், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், மனித உரிமை இயக்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆகியோர் இம்மநாட்டில் கலந்து கொண்டனர்.

நேற்றைய மாநாட்டுக்கு பல பகுதிகளில் இருந்தும் பல நூற்றுக்கணக்கான அன்னையர்கள் வருகை தந்திருந்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியாவில் போர் விமானங்கள் எரிபொருள் நிரப்புவது இன்று முதல் நிறுத்தம்

இந்தியாவூடாக தனது போர்விமானங்கள் செல்வது எரிபொருள் நிரப்புவது போன்ற நடவடிக்கைகளை இன்று முதல் நிறுத்திக் கொள்ளப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இத் தகவலை புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் நேற்று வெளியிட்டார்.

இதுபோன்ற அறிவிப்பை அமெரிக்க அரசு உத்தியோகபூர்வமாக வெளியிடுமா?" என்று செய்தியாளர் கேட்டதற்கு, அந்த அதிகாரி "வெளியிடக்கூடும்" என்று பதிலளித்தார். [ஒ-எ]

## சிமெந்து ஊழியர்களுக்கு இவ்வாரம் சம்பளம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், பெப். 20

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு இவ்வாரம் ஜனவரி மாதத்துக்குரிய சம்பளம் வழங்கப்படவிருக்கிறது.

கொழும்பில் இருந்து கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று திரும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ். பலகலைக்கழக விகிதர், தொழில்நுட்பவியலாளர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி, நுண்ணறிவு I. Q. விலை 56.50 அஸ்ரன் வெளியீடு எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். [சி/5780]

சாயிபாபாவின் அழகிய வர்ண ஸ்ரிக்கேர்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 266/1, ஸ்ரான்லி வீதியில் உள்ள ஸ்ரீ சாயிறாம் புத்தகசாலையில் தொடர்பு கொள்ளவும். [விக்னா ரியூஷன் சென்ரர் அருகாமை]. [15783]

## புத்தகங்கள்

புதிய உயர்தர விலங்கியல் பகுதி II ஆசிரியர் K. சங்கர ஐயர் B.Sc [கரப்பான் பூச்சியும், முள்ளந்தண்டு விலங்குகளின் உதாரணமாக தேரையும், விளக்கப்படங்களுடன் வெளிவந்துள்ளது] விலை ரூபா 37-50 வெளியீடு: விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். [சி-5779]

## வைக்கோல்

எமது பால் பண்ணைக்கு வைக்கோல் தேவை. தொகையாக தர விரும்புவோர், காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு கூறு விலையை சமர்ப்பிக்கவும். யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், கலா சாலை வீதி, திருநெல்வேலி. [சி-5788]

## நோவு வைத்தியம்

முட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணை எஸ்ரி மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [15876]

## மணமகன் தேவை

யாழ்ப்பாண, றோமன் கத்தோலிக்க மதப்பெற்றோர் தங்கள் குமாரரான அழகுள்ள 32 வயதுள்ள, மகளுக்கு அரச கூட்டுத்தாபனத்தில் நிரந்தர பதவி வகிக்கும் நற்குணமுள்ள மணமகனைத் தேடுகின்றனர். வீடுவளவும், நகையும், ரொக்கமும் சீதனமாக வழங்கப்படும். முழு விபரத்தையும் முதற் கடிதத்தில் எழுதவும். 180, C/O உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [15880]

## தேவை

சமையல் வேலையில் நன்கு அனுபவமுள்ள சமையல்காரர் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்க்கலாம். பாரத் கபே, 86/1, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். [15878]

## போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளையும், றோணியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் உடனடியாகப் பெற்றுக் கொள்ள இலீன் கட் 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [14608]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**பொன்னம்மா கந்தையா**

மலர்வு:
25 - 03 - 1906
உதிர்வு:
20 - 02 - 1990
திதி:
10 - 03 - 1991

உங்கள் வாழ்நாளெல்லாம் எங்கள நல்வாழ்வுக்காக அயராது உழைத்துஎம்மை உயர்நிலையில் வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வருந்தும்:
மக்கள்; மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

"இரத்தினகிரி"
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
[15831]

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**பிரபாலினி பாலசுப்பிரமணியம்**

[வேம்படி மகளிர் கல்லூரி, உயர்தர விஞ்ஞான வருப்பு மாணவி]

தோற்றம்: 15 — 10 — 1963
அகால மறைவு: 20 — 02 — 1983

பிரபா — புன்சிரிப்புடன் இறைவனின் திருவடியில் நீர் மழலையாகி விட்டீரே.

இந்நாளும், எந்நாளும் நின் நினைவு ஏந்திக் கரம் குவித்து பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்,
உறவினர்கள், நண்பர்கள்.

கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.
[15331]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**புவனேஸ்வரி நல்லப்பா**

[குப்பிளான்]

மலர்வு: 16 - 12 - 1947
உதிர்வு: 21 - 01 - 1991
நீத்தார் வீட்டுக்கிருத்தியம்; 20 - 02 - 1991

எங்கள் பாசமலரே! பசுமைத் திருவே!
வஞ்சனையற்ற பிஞ்சு மனமே!
தாயினும் சாலப் பரிந்து நீ செய்த சேவைகள் யாவும், நெஞ்சில் நினைவாய் நீடுவாழும். தன்னலமற்ற சகோதரத் திருவே! உன பிரிவுத் துயரை எழுதிமுடியுமோ! நீ கனவாய்க், காற்றாய், கனவாய்ப் போயினும் எங்கள் சுவாசத் துயிர் மூச்சாய் உங்கள் நினைவே வாழுமம்மா. துர்க்காதேவி கழல் நிழலில் உன் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கிறோம்.

மரணச்சடங்கில் உதவி புரிந்தவர்களுக்கும், துயரில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகள்.

உன் பிரிவால் வாடும்;
தந்தை, அக்கா, தம்பிமார்,
மைத்துனிமார்.

உரும்பராய் தெற்கு. [15651]

## இரண்டாம் ஆண்டு நீங்கா நினைவஞ்சலி



**அமரர் மரியாமபிள்ளை தேவநாயகம்**

[சமுகத் தொண்டர்]

தோற்றம்: 11-06-1953
மறைவு: 20-02-1989

ஆண்டுகளிரண்டு அகன்ற தாயினும்
அன்பனே உன்னை யாரும் மறப்பரோ
மீண்டும் மீண்டும் மிக்கநின் பண்புகள்
நீங்கா நினைவாய் நிலைப்பனவாகும்
அன்பால் எம்மை ஆதரித்தவனே
ஆண்டவர் உனக்கு அருளுவர் நித்தியம்.

நண்பர்கள்

66, பாண்டியன் தாழ்வு
யாழ்ப்பாணம். [15864]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இரட்டை வேடம் தெரிகிறது

இலங்கைக்கு நிதி உதவும் நாடுகளின் கூட்டம் இம்மாத ஆரம்பத்தில் நடைபெற்றிருக்கிறது. வெளிநாடுகள் மற்றும் சர்வதேச நிதி வழங்கும் நாடுகளிடம் கையேந்தி, அவை வழங்கும் பணத்தை, அரசு தமிழ்ப் பகுதிகளில் யுத்தத்துக்குப் பயன்படுத்துகிறது என்பது இப்போது நன்றாகத் தெரிந்த ஒன்று.

இந்த உண்மை இப்போது வெளி உலகுக்கு ஓரளவேனும் தெரிய வந்துகொண்டிருக்கிறது என்று சொல்லலாம். தாம் வழங்கும் பணத்தில் ஒரு பகுதியை, சனநாயகத்தையும் நாட்டின் இறைமையையும் காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு, அடக்குமுறைக்கு எதிராக எழுந்துள்ள தமிழினத்தை அழிப்பதற்கே ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்துகிறது என்பதை வெளிநாடுகள் மெதுமெதுவாக உணரத் தொடங்கியுள்ளன எனலாம்.

அந்த வகையில், கொழும்பில் நடந்த கூட்டத்தில், தமிழ்ப் பிரதேசங்களின் மீது விமானத் தாக்குதல் நடத்தி மக்களைக் கொல்வது குறித்து மேற்குலக நாடுகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. தங்கள் பணம் மக்களைக் கொல்வதற்குப் பயன்படுகிறதே என்று எண்ணி மனம் புழுங்கி வேதனை தெரிவித்திருக்கின்றன.

தமிழர் கொலைக்கு உடந்தையாகக் கூடாது என்ற குற்ற உணர்வு அவர்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும். அந்தக் குற்ற உணர்வு கடன் வழங்குவதை நிறுத்தவேண்டும் அல்லது தமிழர் கொலைகளை நிறுத்துமாறு கொழும்பு அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று தூண்டக்கூடும்.

சம்பந்தப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்ட இந்தியப் பிரதிநிதி விமானத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்கள் கொலை செய்யப்படுவது குறித்து வாயும் திறக்கவில்லை. 'நமக்கேன் வீண் சோலி', நேருக்கு நேர் கண்டனம் அல்லது கவலை தெரிவித்து, கொழும்பு அரசுடன் நெருங்கிவரும் உறவை ஏன் கெடுத்துக்கொள்ள வேண்டும் என்று 'கப்சிப்' என இருந்துவிட்டார்.

புதுடில்லி எப்போதும் கொழும்பு அரசின் பக்கம் தான். தமிழர் பக்கம் அல்ல. தமிழர்களை அரச படைகள் கொல்லும் போதெல்லாம் வெறும் கவலை- கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிடுவதோடு அதன் தமிழர் பற்று, மனிதப் பற்று முடிந்து விடுகிறது. அந்த அறிக்கைகள் கூட தமிழகத்தில் வாழும் தமிழர்களைத் திருப்திப்படுத்துவதற்காகத் தான்!

1987இல் திருகோணமலையில் வைத்த கண்ணை, இப்போதைக்கு மன்னாரில் எண்ணெய் அகழ்வு என்ற ஆரம்பப் புள்ளியாக்கி கொழும்பைத் தனது பக்கம் திருப்பும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டிருக்கிறது. எனவே கொழும்பின் மனம் நோக அது செயற்படும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

நான்கு நாட்களுக்கு முன்னர்கூட ஈழத் தமிழர் படுகொலை குறித்து கவலை தெரிவித்து புதுடில்லி அரசு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இவ்வாறான அறிக்கைகள் ஈழத் தமிழர் மீதான அனுதாபத்தினாலோ அல்லது அவர்களுக்கு உதவவேண்டும் என்ற உளப்பூர்வமான விருப்பத்தினாலோ வெளியிடப்படுபவை அல்ல. அவை வெறும் வேடங்கள். தமிழகத்தில் உள்ள வாக்கு வங்கிப்பலம் தேய்ந்து போகக்கூடாதே என்பதற்காக எழுதப்படுபவை.

சம்பந்தப்பட்ட கொழும்புக் கூட்டத்தில் இந்தியா வாயும் திறக்காதது குறித்து இந்தியத்தூதுவர் திரு. ஜா — விமானத் தாக்குதல் நடத்துவது சட்டபூர்வமானதே என்று கூறியிருப்பது இந்தியாவின் உள்ளார்ந்த நிலையை எடுத்துக் காட்டுகிறது. அவரைக் குறை சொல்வது எப்படி?

இதற்கு மேலும் புதுடில்லி போடும் இரட்டை வேடம் குறித்து, அதன் சுயநலம் குறித்து நாம் என்ன கூறவேண்டி இருக்கிறது? தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவின் உதவி தேவை என்று இன்னமும் கருதிக்கொண்டிருப்பவர்களுக்கு இது ஒரு நல்ல 'டோஸ்'!

# கள்ளின் பாவனையைக் குறைத்து மாற்று உணவு தயாரிக்கத் திட்டம்

## இன்றைய தேவை கருதி நடவடிக்கை

ஒட்டுசுட்டான், பெப். 20

பனையில் இருந்து பெறும் கள்ளை தற்போதைய தேவை கருதி மாற்று உணவுப் பொருளாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது கள்ளின் பாவனையைக் குறைத்து கள்ளில் இருந்து சீனி, கல்லாக்காரம், பனைவெல்லம், போதி செய்த பதநீர் ஆகியவற்றை உற்பத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டிருப்பதாக வடபிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. ரீ. சபாரத்தினம் தெரிவித்தார்.

இதற்காக கள்ளின் கொள்முதல் விலை, விற்பனை விலை ஆகியவையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கள்ளு கூடுதலாக உற்பத்தியாகும் மார்ச் முதல் ஜூலை வரை ஒரு போத்தல் கள்ளின் கொள்வனவு விலை 6 ரூபாவாகவும் விற்பனை விலை 9 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் தொடக்கம் கொள்முதல் விலை போத்தல் 8 ரூபாவாகவும், விற்பனை விலை 12 ரூபாவாகவும் இருக்கும்.

அதேபோன்று தென்னங்கள்ளுக்கும் புதிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தென்னங்கள்ளு முழு வருடத்துக்கும், கொள்முதல் விலை 7 ரூபாவாகவும், விற்பனை விலை 10 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பனம் பதநீர் கொள்முதல் விலை 7 ரூபாவாகவும், தென்னம் பதநீர் கொள்முதல் விலை 8 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வடிசாலைகளுக்கு விற்கும் கள்ளின் விலை ஒரு புள்ளி மதுசாரயத்துக்கு ரூ. 1-75ம் செறிவு குறைந்த ஒரு புள்ளி மதுசாரயத்துக்கு ரூ. 2-25ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

[இ-113]

## விபரீதமானது

தென்மராட்சி, பெப். 20

எரிந்து கொண்டிருந்த ரயருக்கு மேலாக பாய்ந்து விளையாடிய இரு சிறுவர்கள் பாயும்போது நேருக்கு நேர் மோதி நெருப்புக்கு மேல் வீழ்ந்தனர். இருவரும் எரிகாயங்களுக்கு உள்ளாகி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் யேசுதாஸன் குலேந்திரன் [வயது 14] தியாகராசா அனஸ்ரின் [வயது 8] ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

[இ 127]

## மாநாடு

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தின் ஆதரவில் இம்மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ ராமகிருஷ்ணர் - விவேகானந்தர் இளைஞர் மாநாடு நடைபெற உள்ளது.

அன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் மாநாட்டில் டாக்டர் மு. க. முருகானந்தன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. வை. கா. சிவப்பிரகாசம் ஆகியோர் ராமகிருஷ்ணர், விவேகானந்தர் குறித்து விசேட உரைகள் நிகழ்த்துவர்.

வடமராட்சியில் உள்ள பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இம் மாநாட்டில் கலந்து கொள்வர்.

[அ]

## வல்வை முத்துமாரியம்மன் கோயிலில் மீண்டும் பூசை

வடமராட்சி, பெப். 20

சமீபத்திய குண்டு வீச்சினால் சேதம் அடைந்த வல்வை முத்துமாரி அம்மன் கோயில் பூசை மீண்டும் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

வல்வை முத்துமாரி அம்மன் கோயிலை மீண்டும் புனரமைத்து பூசைகளை ஆரம்பிப்பது தொடர்பாக, ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. வ. இ. நடனசிகாமணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் பாலஸ்தாபனம் செய்வது உசிதமல்ல என்றும், எனவே அந்தரப் பிரதிஷ்டை செய்து கோயில் சாந்தி செய்து பூசையை ஆரம்பிப்பது என்றும் ஆலய நிதியில் இருந்து ஆரம்ப திருத்த வேலைகளை மேற்கொள்ளுவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

[இ]

## மரக்கறி விலைகள் வீழ்ச்சி

கொக்குவில், பெப். 20

தெற்கிலிருந்து லொறிகள் வராமலேயே திருநெல்வேலிச் சந்தை கண்டி மரக்கறிச் சந்தை போன்று காட்சி அளிக்கிறது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட கரட், பீட்ருட், கோவா, சலாது, மற்றும் தக்காளி, கத்தரி ஆகியவை சந்தையில் நிறைந்து காணப்படுகின்றன.

சாதாரண மக்களும் வாங்கக்கூடிய விதத்தில் இவற்றின் விலைகளும் பெரும் அளவில் குறைந்துள்ளன.

[இ-69]

## புஷ்ஷை நோக்கி கோஷம்

★ ஜனாதிபதி புஷ் தமது குடும்பத்தினருடன் தேவாலயம் ஒன்றில் ஞாயிறு ஆராதனைகளில் கலந்து கொண்டபோது, அங்கு கூடியிருந்தவர்களில் ஒருவர், புஷ்ஷை நோக்கி, 'ஈராக் மீதான நாகரீகமற்ற விமானத் தாக்குதலை உடனடியாக நிறுத்துங்கள்'— என்று உரத்த குரலில் கோஷம் எழுப்பினார். திரு. புஷ் அமைதியாக அதனைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

## சோவியத் சமரச யோசனை

வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் சமர்ப்பித்த சமரச யோசனைகள் பற்றிய விவரங்களை ஜேர்மன பத்திரிகை ஒன்று நேற்று வெளியிட்டது.

யோசனைகளில் சில வருமாறு:

★ குவைத்தில் இருந்து நிபந்தனையற்ற முறையில் ஈராக் படைகள் வாபஸ் வாங்கப்படவேண்டும்.

★ ஈராக்கின் நிலம் மற்றும் கடல் எல்லைகள் உத்தரவாதம் செய்யப்படவேண்டும்.

★ போர்க் குற்றங்களுக்காக ஜனாதிபதி சதாம் ஹுசேன் மீது விசாரணை நடத்தப்படக்கூடாது என்று உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

★ பலஸ்தீனப் பிரச்சினை உட்பட சகல பிரச்சினைகள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும்.

## தேயிலைக்கு அனுமதி மறுப்பு

கெய்ரோ, பெப். 20

இலங்கையில் இருந்து எகிப்துக்கு அனுப்பப்பட்ட தேயிலையை அங்கு இறக்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

40 கொள்கலன்களில் அனுப்பப்பட்ட இலங்கைத் தேயிலையில் கூடுதல் இரும்புச்சத்து இருப்பதாக எகிப்தின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்ததைத் தொடர்ந்தே அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இலங்கைத் தேயிலையுடன் சென்ற கப்பல் எகிப்தின் அலெக்சாந்திரியா துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்காலை முகாமில் 100பேர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 20 மன்னாரிலுள்ள வங்காலை முகாம் இராணுவத்தினர், 100 க்கும் மேற்பட்டவர்களை தடுத்து வைத்தனர்.

நேற்று முன்தினம் தடுத்து வைக்கப்பட்டவர்களில் அனேகர் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் அனைவரையும் படையினர் சித்திரவதைகளுக்கு உட்படுத்தி, விசாரணை செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலைவரை ஐவர் மட்டுமே விடுவிக்கப்பட்டிருந்தனர் என்று அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன. [ஒ-15]

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் நாகரத்தினம்

நெல்லியடி-பொன். கந்தையா வீதியைச் சேர்ந்த வல்லிபுரம் நாகரத்தினம் நேற்று [19-2-91] காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், நவரத்தினம் [கௌரி றான்ஸ்போட்], திரவியம், சிவசோதி, சிவநேசன், சிவபாக்கியம், இராசமலர் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் [20-2-91] முற்பகல் 9 மணியளவில் ஆலங்கட்டை மயானத்தில் நடைபெறும்.

[15653] தகவல்:
நா. நவரத்தினம்.

### செல்வன் வா. மகாதேவன்

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த வாமதேவன் மகாதேவன் [17-2-91] அன்று கொழும்பில் காலமானார்.

இவர் சோ. வாமதேவன் [பிரான்ஸ் - முன்னைநாள் ஆசிரியர் வேலணை துரைச்சாமி ம. ம. வி] திருமதி இராசலெட்சுமி [அதிபர் அல்லைப்பிட்டி, றோ. க. பா] அவர்களின் அன்பு மகனும், மேகலை [யாழ். பல்கலைக் கழகம்], சத்தியதேவன் [யாழ். தொழில் நுட்பக் கல்லூரி], இராகதேவன், மேகசலை ஆகியோரின் பிரிய சகோதரரும், உரும்பிராய் காலஞ்சென்ற சோமசுந்தரம், சொர்ணம்மா [பாக்கியம்] தம்பதிகளினதும், அல்லைப்பிட்டி தருமலிங்கம், காலஞ்சென்ற கமலம்மா தம்பதிகளின் பேரன்புப் பேரனும், பால சுப்பிரமணியம் தம்பதிகள் [பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்], கமலநாதன் தம்பதிகள் [ஜேர்மனி], யோகநாதன் [கண்ணன்], சந்திராதேவி ஆகியோரின் பெறாமகனும், துரைராஜா தம்பதிகள், சிவஞானம் [C. G. R. திருகோணமலை], ஞானேஸ்வரி தம்பதிகள், திருமதி மகாலிங்கம், அருணகிரிநாதன் தம்பதிகள் [ஆசிரியர் வேலணை] கேதாரநாதன் தம்பதிகள் ஆகியோரின் மருமகனும், யசோதா, சந்திரிகா, கிரிதரன், பாலச்சந்திரன், கார்த்திகா, காயத்திரி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், முரளிதரன், புஸ்பா, நளாயினி, இராகவன், பிரதீபா, அகிலா, அமுதினி, யாதவன், கவிதா, சிவரூபன், சஞ்சீவன், தர்மினி, கமலாஜினி, பிரணவன் ஆகியோரது அன்பு மச்சானும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[15656] வா. சத்தியசீலன்

### சோமசுந்தரக்குருக்கள் இரத்தினசபாபதிக்குருக்கள்

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சோமசுந்தரக் குருக்கள் இரத்தினசபாபதிக்குருக்கள் 19-2-91 மாலை காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-2-91 இன்று 10 மணி அளவில் நடைபெறும்.

தகவல்:
இ. பிரணதார்த்திஹரக்குருக்கள்.
[மகன்]

வீரபத்திரர் கோவில்,
கோப்பாய் தெற்கு.
கோப்பாய். [15655]

## புலிகளுடன்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சின் செய்தியுடன் - விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொள்வதற்காக யாழ்ப்பாணம் சென்றனர்.

பேச்சுக்களை ஆரம்பிக்க தான் விதித்திருக்கும் மூன்று முன் நிபந்தனைகளும் தளர்த்தப்படக் கூடியவை என்று இவர்கள் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அரசு உணர்த்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இந்த மத்தியஸ்தர்கள் யாழ்ப்பாணம் சென்றிருந்த சமயத்தில்தான் வல்வெட்டித்துறையில் குடிமக்கள் வாழும் இடங்களில் பெரும் விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

இது பேச்சுவார்த்தை தொடர்பான விடுதலைப் புலிகளின் போக்கை கடுமையாக்கிவிட்டது.

புதிதாக எந்த ஒரு சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பிக்க முன்னர் இந்தக் குண்டுவீச்சுகளினால் ஏற்பட்ட சேதங்களுக்காக அந்த மக்களுக்கு ஸ்ரீலங்கா அரசு நஷ்டஈடு செலுத்த வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அரசுக்கு பதில் செய்தி அனுப்பியிருப்பதாக நம்பப்படுகிறது.

இது தவிர பேச்சுவார்த்தை நிபந்தனையற்றதாகவும் கொழும்பில் அல்லாமல் நடுநிலையான ஒரிடத்திலேயே நடைபெற வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அச்செய்தியில் அரசுக்கு உணர்த்தியுள்ளனர்.

ஒரு புறத்தில் சமாதானப் பேச்சுக்காக மத்தியஸ்தர்களை அனுப்பும் அரசு மறுபுறத்தில் விமானத் தாக்குதல்களை நடத்துகிறது.

அரசின் இந்தக் கொள்கை புதிரானதாக உள்ளது.

சமாதான பேச்சுக்கான எந்த ஒரு வாய்ப்பையும் சீர்குலைக்க வேண்டும் என்ற நோக்கில் இராணுவம் நடந்து கொள்கின்றது என்று அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கடந்த மாத போர் நிறுத்தம் ஒரு வாரத்துக்கு மேல் நீடிக்கப்படாதிருக்க இராணுவமே பொறுப்பாக இருந்துள்ளது.

— இப்படி 'இந்து' நாளிதழ் தெரிவித்துள்ளது. [உ-3]

## சீமெந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பியதையடுத்து சம்பளம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போனஸ் மற்றும் சம்பள உயர்வு வழங்க கூட்டுத்தாபன தலைமைப்பீடம் கொள்கையளவில் சம்மதித்துள்ளது என்றும் —

இது சம்பந்தமான தீர்க்கமான முடிவு நாளை கொழும்பில் நடக்க இருக்கும் கூட்டுத்தாபன தலைமையக கூட்டத்தின் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் — நேற்று யாழ். வந்து சேர்ந்த

## பட்ஜட் சமர்ப்பிக்க முடியாத நிலையில் சந்திரசேகர்

பிரதமர் சந்திரசேகர் அரசின் முதலாவது வரவு-செலவுத் திட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி, எதிர்வரும் 28 ஆம் திகதி கூடவிருக்கும் இந்திய லோகசபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் சந்திரசேகர் இத்தகவலை கடந்த திங்கட்கிழமை ஒரிஸ்ஸா தலைநகர் புவனேஸ்வரில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

மிக விரைவில் நடைபெறவிருக்கும் தமிழக சட்டசபைக்கான பொதுத்தேர்தலில் சகல அரசியல் கட்சிகளின் எம்.பிக்களும் தீவிரமாக பங்கேற்க வசதிசெய்து கொடுக்கும் பொருட்டே பட்ஜட் சமர்ப்பணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் —

எதிர்வரும் ஜூன் மாதம் அளவில் புதிய பட்ஜட் சமர்ப்பிக்கப்படலாம் என்றும் திரு. சந்திரசேகர் மேலும் சொன்னார்.

இதேவேளை — இடைக்கால நிதி ஒதுக்கீட்டு அறிக்கை ஒன்று வரவு-செலவுத் திட்டத்துக்குப் பதிலாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார். [இ-எ]

## ரஷ்யாவின் சமரசத் திட்டம் அமெரிக்காவுக்கு திருப்தியில்லை

நியுயோர்க், பெப். 20 வளைகுடாப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு சோவியத் யூனியன் முன்வைத்த சமரசத் திட்டம் திருப்திகரமானதல்ல என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் சமரசத் திட்டம் குறித்து நேற்றுக் காலை தமது பாதுகாப்பு ஆலோசகர்களுடன் ஜனாதிபதி ஆராய்ந்தார்.

மாலையில் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தனர்.

அதன் பின்னர் அவர் சோவியத் திட்டம் திருப்திகரமானதல்லை என்று அறிவித்தார். வளைகுடாப் போரை முடிவுக்கு கொண்டுவரக் கூடிய அம்சங்கள் அதில் இல்லை என்றும் ஜனாதிபதி புஷ் வர்ணித்தார். [அ]

## உருக்கமாக..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தனர்.

அன்னையரில் பலர் காணாமற் போன தமது பிள்ளைகளின் படங்களை வைத்திருந்தனர். அவர்கள் மிகவும் உணர்ச்சிபூர்வமான நிலையில் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

சில தாய்மார்கள் துக்கம் தாளமாட்டாது கண்ணீர் வடித்தனர் என்றும் இன்னும் சிலர் மயக்கம் அடைந்தனர் என்றும் செய்திகள் தெரிவித்தன. [ஒ-எ-5]

## காங்கிரஸ் ஆதரிக்கும்

புதுடில்லி, பெப். 20 பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான ஜனதா தள் அரசுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கப் போவதாக இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழு நேற்று முடிவு செய்தது.

கூட்டத்திற்கு முன்னாள் பிரதமரும் கட்சித் தலைவருமான திரு. ராஜீவ் காந்தி தலைமை வகித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா இராசதுரை

வட்டுக்கோட்டை மேற்கு மூளாய் வீதியைச் சேர்ந்த திருமதி அன்னம்மா இராசதுரை சிவபதம் எய்திவிட்டார். அன்னார் திரு. க. இராசதுரை [பென்சனர் C. G. R] அவர்களின் அன்புத் துணைவியாரும், திருமதி சறோஜினிதேவி மாசிலாமணி, கலாநிதி. இ. சிதம்பரநடராசா [லண்டன்], இ. கணேசராசா [லண்டன்], இ. சண்முகராசா [லண்டன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. க. மாசிலாமணி [கூட்டுறவுத் திணைக்களம்], திருமதி சி. சுமித்ரா [லண்டன்], திருமதி க. யசோதா [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமியாரும், கார்த்திகா, நிரஞ்சன் [லண்டன்], ஐங்கரன் [லண்டன்] ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 30-2-91 ஆம் திகதி மு.ப. 10 00 மணிக்கு தகனக்கிரியைக்காக வழுக்கையாற்று மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
15654 க. இராசதுரை

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org